C. S. (Main) Exam : 2011

D-DTN-L-UBB

TAMIL
Paper II
(Literature)

Time Allowed : Three Hours | *Maximum Marks : 300*

INSTRUCTIONS

Candidates should attempt questions 1 and 5 which are compulsory, and any THREE of the remaining questions, selecting at least ONE question from each Section.

All questions carry equal marks.

Answers must be written in Tamil.

SECTION A

1. கீழ்க்காணும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை தருக : *20×3=60*

   (அ) குறுந்தொகையில் இடம்பெறும் தலைவி கூற்றுச் செய்யுட்களில் வெளிப்படும் பிரிவுத்துயரையும், அதனை வெளிப்படுத்தும் தலைவியின் திறனையும் புலப்படுத்துக.

   (ஆ) சிலப்பதிகாரப் புறஞ் சேரியிறுத்த காதை காப்பியக் கதைப் போக்கிற்கு உதவும் தன்மையினை விளக்குக.

Optional Province · optionalprovince.com

(இ) மாணிக்க வாசகர் மனிதவாழ்க்கையைப் பொறிகளும் மனமும் அலைக்கும் தன்மையை எங்ஙனம் கூறுகின்றார் ?

2. (அ) புறநானூற்றில் பொதுவியல் திணைப்பாடல் கள் உணர்த்தும் வாழ்வியல் பண்புகளை எடுத்துக்காட்டுக. *30*

(ஆ) அரசனுக்காகும் பண்புகளையும் ஆகாப் பண்புகளையும் திருவள்ளுவர் கூறும் பாங்கினை விளக்குக. *30*

3. (அ) கும்பகருணன் தன் உடன்பிறந்தார் மீது கொண்ட பேரன்பினைப் புலப்படுத்துக. *30*

(ஆ) திருப்பாவை வழி வெளிப்படும் இயற்கை வருணனைச் சிறப்புகளைப் புலப்படுத்துக. *30*

4. கீழ்க்காணும் செய்யுட் பகுதிகளில் இடம் சுட்டிப் பொருள் நலத்தையும் காட்டுக : *20×3=60*

(அ) இணை அரிச் சிலம்பு ஒன்று ஏந்திய கையள் கணவனை இழந்தாள் கடையகத்தாள் என்று அறிவிப்பாயே, அறிவிப்பாயே.

(ஆ) இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு ஒத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதி கண்டாய்.

(இ) வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று புள்ளும் சிலம்பின காண்.

Optional Province · optionalprovince.com

SECTION B

5. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை எழுதுக : *20×3=60*

(அ) குடும்ப விளக்கு போற்றும் தாய்மையின் உயர்பண்புகளைப் பாவேந்தர் பாரதிதாசன் வழிநின்று காட்டுக.

(ஆ) கிராம வாழ்க்கையிலும் நகர வாழ்க்கையிலும் காணும் வேறுபாடுகளைக் குருபீடம் நூலில் ஜெயகாந்தன் எவ்வாறு படம்பிடித்துக் காட்டுகிறார் ?

(இ) முக்குப்பட்டன் கதைவழி வெளிப்படும் சமுதாயச் சீர்கேடுகளைத் தெளிவு செய்க.

6. (அ) சமயநெறிப் பாடல்களிலிருந்து கண்ணன் பாட்டு வேறுபட்டு. இறைவனை மிக நெருக்கமாக உரிமையுடன் அணுகி நிற்பதைப் புலப்படுத்துக. *30*

(ஆ) குறுகிய நோக்கத்தால் விளையும் தீமைகளை 'அறமும் அரசியலும்' நூலில் மு. வரதராசனார் எங்ஙனம் விளக்குகின்றார் ? *30*

Optional Province · optionalprovince.com

7. (அ) கறுப்பு மலர்களில் நா. காமராசன் வெளிப்படுத்தும் சமுதாய விழிப்புணர்வுச் சிந்தனைகளைத் தெளிவு செய்க. *30*

(ஆ) தாழ்ந்த தமிழகம் தலைநிமிர அறிஞர் அண்ணா கூறும் வழிமுறைகள் யாவை ? *30*

8. (அ) சித்திரப்பாவையில் இடம் பெறும் அண்ணாமலை, மாணிக்கம், ஆன்ந்தி ஆகிய கதைமாந்தரின் உருவாக்கம் குறித்துத் திறனாய்வு செய்க. *30*

(ஆ) மலையருவியில் வெளிப்படும் கிராமியப் பண்புநலன்களை வெளிக்காட்டுக. *30*

Optional Province · optionalprovince.com